بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

இதழ் 47

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுஸ்ஸானீ 28 ★ நுபுவ்வத் 24 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 24 நவம்பர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِیۡنَ یُمَسِّکُوۡنَ بِالۡکِتٰبِ

وَاَقَامُوا الصَّلٰوۃَ ؕ

اِنَّا لَا نُضِیۡعُ اَجۡرَ الۡمُصۡلِحِیۡنَ

**பொருள் :**

வேதத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு தொழுகையினையும் நிறைவேற்றித் தங்களை சீர்திருத்திக் கொள்பவர்களின் நற்பலனை நாம் வீணாக்க மாட்டோம்.

(அல் அஃராஃப்:171)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**மக்கள் மீண்டும் மீண்டும் இங்கு வராத வரையிலும், இங்கு வருவதற்கு சிறிது களைப்படைந்து விடும் போதும் நாம் விரும்புகின்ற நோக்கம் மேலும் எதற்காக அல்லாஹ் எம்மை அனுப்பியுள்ளானோ அது முழுமையடைய முடியாது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### தலைமையகத்திற்கு மீண்டும் மீண்டும் வருவதற்கு வலியுறுத்தல்

1889ஆம் ஆண்டு, டிசம்பர் ஆண்டு மாநாட்டில் மிகக் குறைவான மக்களே வந்தனர். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் வேதனையை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள்:

இன்றைய மக்கள் எமது நோக்கங்களை அறியாதவர்களாக இருக்கின்றனர். மேலும், அவர்கள் எவ்வாறு ஆக வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்? என்பதையும் அவர்கள் அறியாமல் உள்ளனர். மக்கள் மீண்டும், மீண்டும் இங்கு வராத வரையிலும், இங்கு வருவதற்கு சிறிது களைப்படைந்து விடும்போதும் நாம் விரும்புகின்ற நோக்கம் மேலும் எதற்காக அல்லாஹ் எம்மை அனுப்பியுள்ளானோ அது முழுமையடைய முடியாது.

கூறினார்கள்: இங்கு வருவதால் தம் மீது சுமை ஏற்படும் என்று எவர் எண்ணுகின்றாரோ அல்லது இங்கு வந்து தங்குவதால் எமக்கு சுமையாக இருக்கும் என்று எவர் கருதுகின்றாரோ அவர் அஞ்ச வேண்டும். அவர் ஷிர்க்கில் ஈடுபடுகின்றார். முழு உலகமும் எமது குடும்பமாகிவிட்டாலும் எமது திட்டங்களின் பாதுகாவலன் இறைவன் ஆவான் என்பது எமது கொள்கையாகும். எம் மீது சிறிதும் சுமை இருக்காது. நண்பர்களை பார்ப்பதால் எமக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. (எனவே) அந்த தீய எண்ணத்தை உள்ளத்திலிருந்து (வெளியே) அகற்றி விட வேண்டும்.

நாங்கள் இங்கு வந்து அமர்ந்து கொண்டு ஹஸ்ரத் சாஹிபிற்கு ஏன் துன்பம் கொடுக்க வேண்டும்? நாங்கள் பயனற்ற மக்கள் ஆவோம். வீணாக அமர்ந்து கொண்டு ஏன் உணவு அருந்த வேண்டும்? என்று சிலர் கூறுவதை நான்

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

**ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) தமது எல்லா சிறப்புகளையும் இறை அருட்கொடையாக கருதினார்கள். மேலும் அனைத்து நற்பண்புகளையும் இறைவன் வழங்கிய கருவூலமாக கருதியிருந்தார்கள். எந்த அளவிற்கு அன்னாரின் பண்புகள் ஒளிவீசி வந்தனவோ அந்த அளவிற்கு அன்னார் இறைவன் பக்கம் குனிவதில் முன்னேறி வந்தார்கள். நீங்கள் இப்ராஹீமைப் போன்று ஆக வேண்டும்**

شَاکِرًا لِّاَنۡعُمِہٖ ؕ اِجۡتَبٰہُ

وَہَدٰىہُ اِلٰی صِرَاطٍ مُّسۡتَقِیۡمٍ

பொருள்: (அவர்) அவனுடைய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவராயிருந்தார். அவன் அவரைத் தேர்ந்தெடுத்தான். மேலும், ஒரு நேரான பாதையில் அவரை நடத்தினான். (அந்நஹ்ல்:122)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

அதாவது, அன்னார் தமது ஒவ்வொரு சிறப்புகளையும் இறைவனின் அருட்கொடையாக கருதி வந்தார்கள். மேலும், அந்த அனைத்து நற்குணங்களையும் அல்லாஹ் வழங்கிய கருவூலமாக கருதியிருந்தார்கள். ஆக, அன்னார் அனைத்து அருட்கொடைகளையும் இறைவன் அருளியதாக கருதி வந்தார்கள். எனவே, எந்த அளவிற்கு அவை ஒளிவீசி வந்தனவோ அதே அளவிற்கு அன்னார் அல்லாஹ்வின் முன் குனிவதில் முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

மனிதனிடத்தில் இந்த விஷயங்கள் இருந்தால் பின்னர் அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறு அமையும். அதாவது, அல்லாஹ் அந்த நபரை தனது அருளுக்காக தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். எனவே, அந்த நன்மைகளுக்கு பகரமாக நான் அவரை தேர்ந்தெடுத்துக் கொண்டேன். மேலும் அவர் எல்லா நற்குணங்களிலும் நிலைபெற்றிருப்பதைக் கண்டு நான் எனது அடியாராக அவரைத்

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

## நபிமொழி

**ஒரு நபர் ஒருவருடைய விரலை பற்களால் கடிக்கின்றபோது மற்றவர் கையை உருவிவிடுவதால் கடித்தவரின் பல் உடைந்துவிட்டால் அந்த பல்லுக்கு இழப்பீடு கிடைக்காது**

(2265) ஹஸ்ரத் யஃலா பின் உமைய்யா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஜய்ஷுல் உஸ்ரா (அதாவது தபூக்) போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தேன். (நற்கூலியின் அடிப்படையில்) எனது நம்பிக்கைக்குரியதாக இருந்த மற்ற அனைத்து அமல்களை விடவும் என்னைப் பொருத்தவரை இந்த அமல் சிறந்ததாக இருந்தது. (என்னுடன்) என்னுடைய வேலையாள் ஒருவரும் இருந்தார். அவர் ஒரு நபருடன் சண்டையிட்டார்.

சண்டையின்போது அவர்கள் இருவரில் ஒருவர் மற்றவரின் விரலைக் கடித்துவிட்டார். அந்த நபர் தனது விரலை வேகமாக உருவியபோது அதனால் இரண்டாம் நபரின் பல்லிற்கு அழுத்தம் ஏற்பட்டது. அதனால் அது கீழே விழுந்துவிட்டது. அப்போது அந்த நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் முறையீடு செய்ய சென்றார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த நபரின் பல்லிற்கு எந்த இழப்பீடும் வழங்கவில்லை. மேலும் அவர் தனது விரலை உமது வாயில் கொடுத்துக் கொண்டிருந்திருந்தால் அதனை நீர் மென்றிருப்பீரா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். (இப்னு ஜரீஜ்) கூறிவந்தார்கள்: எனது கருத்தின்படி, ஒட்டகம் மெல்லுவதைப் போன்று (மென்றிருப்பீரா?) என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள்.

(புகாரி தொகுதி 4, பாடம்- உஜாரா, காதியான் பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிகளாகிய நம் மீது அல்லாஹ் செய்துள்ள மாபெரும் கருணை இதுவாகும். அதாவது, அவன் நமக்கு காலத்தின் இமாமையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரையும் ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு வழங்கியுள்ளான்**

**அல்லாஹ்விற்கு செலுத்தும் நன்றி என்பது நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை பேணி நடக்க வேண்டும். மேலும், அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமைகளையும் செலுத்தக்கூடியவர்களாகத் திகழ வேண்டும். மேலும், அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும்**

**ஐயங்களும், சந்தேகங்களும் நிறைந்துள்ள ஈமான் எந்த நல்விளைவையும் ஏற்படுத்தாது. ஆயினும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உண்மையிலேயே நீதிநெறி தீர்ப்பவர் ஆவார் என்று உண்மையான உள்ளத்துடன் நீங்கள் நம்பிக்கை கொண்டுவிட்டீர்கள் என்றால், பின்னர் அவரது கட்டளை மற்றும் செயலுக்கு முன்னால் உங்களது ஆயுதங்களை கீழே போட்டுவிடுங்கள். மேலும், அவரது தீர்ப்புகளை கண்ணியத்துடன் பாருங்கள்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் உரிமைகளை செலுத்துவது தொடர்பாகவும், நமது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைகளில் மேன்மையை உருவாக்குவது தொடர்பாகவும் அறிவுரைகள்**

**தற்போது இறைவன் நிரந்த வாழ்விற்காக உருவாக்கியுள்ள நீரூற்றிற்கு அருகில் நீங்கள் வந்தடைந்துவிட்டீர்கள். ஆயினும், நீங்கள் (அந்த) தண்ணீரை பருக வேண்டியது இன்னும் மீதமிருக்கின்றது**

**இந்த உலகம் நம்மையும் பாதுகாக்காது. நமது சந்ததிகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்காது. இன்னும் கூறப்போனால், கலிமாவின் உரிமையை வழங்கக் கூடியவர்களாக நாம் திகழ்ந்தால் பின்னர் அல்லாஹ் நமது பணிவான துஆக்கள் மற்றும் நற்செயல்களின் காரணமாக உலகத்தை பாதுகாத்து விடுவான்**

**எந்த நபர் புரிய வைத்த பிறகும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எதிரான சிந்தனையிலிருந்து விலகுவதில்லையோ அந்த நபரிடமும் நாம் நட்புக் கரத்தை நீட்ட முடியாது. மேலும் எந்த ஓர் அஹ்மதியின் தன்மானமும் அதனை பொறுத்தும் கொள்ளாது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **மேரிலேண்ட், அமெரிக்காவிலுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலில் 14 அக்டோபர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு அகா மாதம் **14ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இது உங்கள் மீது அல்லாஹ்வின் மாபெரும் கருணையாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது மாபெரும் கருணையாகும். இங்கு இந்த நாட்டிற்கு வரக்கூடிய மக்கள் மீது மாபெரும் கருணையாகும். அதாவது அவன் இந்த முன்னேற்றமடைந்த நாட்டிற்கு வருவதற்கு நற்பேறு வழங்கியுள்ளான். மேலும், குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் பாகிஸ்தானிலிருந்து இங்கு ஏராளமான அஹ்மதிகள் வந்துள்ளனர். மேலும், தற்போதும் வந்து கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தானில் அஹ்மதிகளின் சூழல் கடினத்திலும் கடினமாகிக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது என்பதாலும், அங்கு வசிப்பது கடினமாகிவிட்ட காரணத்தினாலும் அங்கிருந்து ஹிஜ்ரத் செய்து மக்கள் வந்துள்ளனர். எனவே, இந்த அடிப்படையில் அங்கிருந்து வந்துள்ள அஹ்மதிகள் இந்த அரசாங்கங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். இந்த அரசாங்கங்கள் ஏராளமான அநீதியிழைக்கப்பட்ட அஹ்மதிகளுக்கு இங்கு வசிப்பதற்கு இடமளித்துள்ளன. ஆனால், அஹ்மதிகளாகிய நம் மீது அல்லாஹ் செய்துள்ள மாபெரும் கருணை இதுவாகும். அதாவது, அவன் நமக்கு காலத்தின் இமாமையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரையும் ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு வழங்கியுள்ளான்.

எனவே நாம் இறைவனுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும், அது குறைவாகும். மேலும், அல்லாஹ்விற்கு செலுத்தும் நன்றி என்பது இதுவாகும். அதாவது, நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை பேணி நடக்க வேண்டும். மேலும், அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமைகளையும் செலுத்தக்கூடியவர்களாக திகழ வேண்டும். மேலும், அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்திற்குரிய உரிமையை வழங்கக் கூடியவர்களாக திகழும்போதுதான் அது சாத்தியமாகும். ஏனெனில், இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி நம்மை வழி நடத்தக்கூடிய தலைவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஆவார்கள்.

எனவே, இந்த விஷயத்தை ஒவ்வொரு அஹ்மதியும் தமது கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, தற்போது உண்மையான இஸ்லாத்தின் போதனை நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலம் மட்டுமே கிடைக்க முடியும். ஏனெனில், அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கே திருக்குர்ஆனின் ஞானங்களையும், அறிவையும் வழங்கியுள்ளான். மேலும், அன்னாரே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக உள்ளார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனை மற்றும் சுன்னத்திற்கேற்ப தமது ஜமாஅத்திற்கு தர்பிய்யத் வழங்க விரும்புகின்றார்கள். எனவே, நாம் உண்மையான முஸ்லிம்களாக திகழ்வதற்கு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பக்கமே பார்க்க வேண்டும். மேலும், அன்னார் (அலை) கூறியுள்ள வழிமுறைக்கேற்ப நாம் நமது வாழ்க்கையை ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் நமது ஈமானை நாம் உறுதியானதாக ஆக்க வேண்டும். அன்னாரின் வருகையின் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் கொள்ள வேண்டும். அன்னாரை நீதி நெறி தீர்ப்பராக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், தற்போது, அன்னார் எடுத்துரைத்துள்ள வழிமுறையின் படி நடந்தால் தான் மனிதன் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் வழி நடக்க முடியும் என்ற நம்பிக்கையில் நாம் நிலைபெற்றிருக்க வேண்டும்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம் மீதான முழுமையான நம்பிக்கையிலும், ஈமானிலும் நிலைபெற்றிருப்பதற்கு

அறிவுரை வழங்கியவாறு தம்மிடம் பைஅத் செய்தவர்களிடம் கூறுகின்றார்கள்:

எந்த நபர் ஈமான் கொள்கின்றாரோ அவர் தமது ஈமானில் உறுதி மற்றும் இறை ஞானம் வரை முன்னேற்றம் காண வேண்டும். வெறும் ஈமான் கொண்டால் போதாது. மாறாக, அதில் உறுதியும் ஏற்பட வேண்டும். நாம் ஏன் பைஅத் செய்கின்றோம்? என்ற ஞானத்தையும் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறல்லாமல், மீண்டும் தப்பெண்ணத்தால் சூழப்பட்டு விடக்கூடாது. அடுத்து, இது ஏன் நடந்தது? அது ஏன் நடந்தது? என்று உள்ளத்தில் தப்பெண்ணங்கள் உருவாகிவிடக் கூடாது. கேள்விகள் எழத் தொடங்கிவிடக் கூடாது. கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள். யூகங்கள் பயன் அளிக்க முடியாது. اِنَّ الظَّنَّ لَا يُغْنِيْ مِنَ الْحَقِّ شَيْـًٔا (யூனுஸ்:37) என்று இறைவன் கூறுகின்றான். நிச்சயமாக, யூகம் உண்மையின் இடத்தில் எந்தப் பலனும் அளிப்பதில்லை. நிச்சயமாக, உண்மை எப்படிபட்ட விஷயம் என்றால், அது மனிதனை வெற்றியாளனாக்கி விடும். நம்பிக்கையில்லாமல், எதுவும் நடக்காது. மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் தப்பெண்ணம் கொள்ளத் தொடங்கிவிட்டால் அவனால் ஒரு நொடிப் பொழுதை கூட உலகில் கழிக்க முடியாது. கூறினார்கள்: அநேகமாக இதில் விஷம் கலந்திருக்குமோ என்ற சந்தேகம் வந்துவிட்டால் தண்ணீர் கூட அவனால் அருந்த முடியாது. கடை வீதிகளில் கிடைக்கும் உணவுகளில் (தன்னை) மாய்த்து விடக் கூடிய பொருள் ஏதும் கலந்திருக்கமோ என்று சந்தேகம் கொண்டால் அந்த உணவை அவனால் உண்ண முடியாமல் போய் விடக்கூடும். பின்னர், அவன் எப்படி உயிர் வாழ முடியும்? வாழ்க்கையை கழிப்பதே கடினமாகிவிடும். இது ஒரு சிறிய உதாரணம் ஆகும். இதேபோன்று, மனிதன் ஆன்மீக விவகாரங்களிலும் இதிலிருந்து பயன் பெற முடியும். கூறினார்கள்: தற்போது நீங்கள் சுயமே சிந்தித்துப் பாருங்கள். மேலும், நீங்கள் உங்களது உள்ளங்களில் தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். அதாவது **நீங்கள் எனது கரத்தில் பைஅத் செய்துள்ளீர்கள். மேலும் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், நீதி நெறி தீர்ப்பவராகவும் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அப்படியென்றால், இவ்வாறு ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு, எனது ஒரு தீர்ப்பினாலோ அல்லது செயலினாலோ உள்ளத்தில் துன்பமும், வேதனையும் ஏற்படுகிறதென்றால் பின்னர் உங்கள் ஈமானைக் குறித்து கவலை கொள்ளுங்கள்.**

ஐயங்களும், சந்தேகங்களும் நிறைந்துள்ள ஈமான் எந்த நல்விளைவையும் ஏற்படுத்தாது. ஆயினும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உண்மையிலேயே நீதிநெறி தீர்ப்பவர் ஆவார் என்று உண்மையான உள்ளத்துடன் நீங்கள் நம்பிக்கை கொண்டுவிட்டீர்கள் என்றால், பின்னர் அவரது கட்டளை மற்றும் செயலுக்கு முன்னால் உங்களது ஆயுதங்களை கீழே போட்டுவிடுங்கள். மேலும், அவரது தீர்ப்புகளை கண்ணியத்துடன் பாருங்கள். அப்போதுதான் நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய விஷயங்களை கண்ணியப்படுத்தக் கூடியவர்களாகவும், மேன்மைபடுத்தக் கூடியவர்களாகவும் திகழ முடியும்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சாட்சியம் போதுமானதாகும். அவர் உங்களது இமாமாக இருப்பார் என்று அன்னார் (ஸல்) ஆறுதல் அளிக்கின்றார்கள். அதாவது, வரக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உங்களிலிருந்தே உங்களின் இமாமாக இருப்பார். அவர் நீதிநெறி தீர்ப்பவராக இருப்பார்.

இதில் உங்களுக்கு திருப்தி ஏற்படவில்லையென்றால், பின்னர் உங்களுக்கு எப்போது திருப்தி ஏற்படும்? ஈமானும் கொண்டுவிட்டு உள்ளத்தின் ஓரங்களில் தப்பெண்ணங்களும் இருக்கும் வழிமுறை ஒருபோதும் நல்ல, அருளுக்குரிய வழிமுறையாக இருக்க முடியாது. நாங்கள் ஈமான் கொண்டுவிட்டோம் என்று வெளிப்படுத்திவிட்டு பின்னர் சில விவகாரங்களில் தப்பெண்ணங்களும் உருவாகிக் கொண்டிருக்கின்றதென்றால் அது நல்லதல்ல. கூறினார்கள்: எந்த மக்கள் என்னை நிராகரித்துள்ளார்களோ மேலும், என் மீது எவர்கள் ஆட்சேபனை செய்கின்றார்களோ அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மேலும், எவர் என்னை ஒப்புக் கொண்டுவிட்டு பின்னர் என் மீது உள்ளத்தில் ஆட்சேபனை கொள்கின்றாரோ அவர் அதிகம் நற்பேறு இழந்தவர் ஆவார். ஏனெனில் அவர் பார்த்த பிறகும் குருடராக இருக்கின்றார். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 73-74, பதிப்பு 1984)

எனவே, இந்த ஈமானின் தரம் நம் அனைவரிடமும் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே தமக்கு பிறகு, கிலாஃபத் நிலைபெற்றிருப்பதற்கான செய்தி வழங்கியுள்ளார்கள். (அல் வஸிய்யத் நூல், ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 306)

மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மட்டும் அல்ல. மாறாக, மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகையுடன் கிலாஃபத் கியாமத் வரை நிலைபெற்றிருப்பதற்கான செய்தியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் வழங்கியுள்ளார்கள். (முஸன்னத் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 6, பக்கம் 285, ஹதீஸ் எண்:18596, ஆலமுல் குதுப், பெய்ரூத்-1998)

மேலும், அஹ்மதிய்யா கிலாஃபத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிமுறையையே தொடரக்கூடிய அமைப்பு ஆகும். அந்த நீதி,நெறி தீர்ப்பவரின் தீர்ப்புகளை தொடரச் செய்யக்கூடிய அமைப்பாகும். தமது உடன்படிக்கையில் கிலாஃபத்துடனும் தொடர்புடையவராக இருப்பதற்கும் கட்டுப்படுவதற்கும் ஒவ்வொரு அஹ்மதியும் உடன்படிக்கை செய்கின்றார். எனவே, இந்த அடிப்படையில் கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் கட்டுப்படுதல் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றுவதும் எல்லா அஹ்மதிகளின் கடமையாகும். இல்லையென்றால், பைஅத் என்பது முழுமையானதாக இருக்காது. எனவே இந்த அடிப்படையிலும் தமது ஈமானையும், உறுதியையும் அதிகரிப்பதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

அடுத்து, திருக்குர்ஆனை ஆழ்ந்து படிப்பதன் பக்கமும், அதனை புரிந்து கொள்வதன் பக்கமும் ஜமாஅத்திற்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மீண்டும், மீண்டும் என்னுடன் தொடர்பு வைத்துள்ள மக்களாகிய உங்களுக்கு இந்த விவகாரத்தின் பக்கம் அறிவுரை செய்கின்றேன். அதாவது, இறைவன் இந்த அமைப்பை உண்மைகளை வெளிப்படுத்துவதற்காக நிறுவியுள்ளான். ஏனெனில், அதுவன்றி, நடைமுறை வாழ்க்கையில் ஒளியும், பிராகசமும் உருவாக முடியாது.

கூறினார்கள்:

நான் விரும்புகின்றேன். செயல் ரீதியிலான உண்மையின் மூலமாக இஸ்லாத்தின் சிறப்புகள் உலகத்திற்கு வெளிப்பட வேண்டும். இந்த பணிக்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். எனவே திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஆயினும், அதனை வெறும் கதைகளாக எண்ணி ஓதாமல் ஒரு தத்துவமாக புரிந்து ஓதுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 155, பதிப்பு 1984)

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த உலகியல் மும்முரங்களில் மூழ்கி நமது பைஅத்தின் நோக்கத்தை நாம் மறந்து விடக் கூடாது!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் ஞானங்களையும், கட்டளைகளையும் புரிய வைப்பதற்கும் அதன்படி செயல்பட வைப்பதற்கும் இறைவன் என்னை அனுப்பியுள்ளான். மேலும், எனது ஜமாஅத்தின் பைஅத்தில் இணைகின்றவர்கள் அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுங்கள். அதன் பொருளையும், தஃப்ஸீரையும் புரிவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மீக கருவூலத்தையும் நாம் புரிவதற்கும்,படிப்பதற்கும் முயற்சி செய்யாத வரையிலும், அன்னார் வழங்கியுள்ள நூல்களை நாம் புரிவதற்கும், படிப்பதற்கும் முயற்சி செய்யாத வரையிலும் இது நடைபெற முடியாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் ஒன்றும் கட்டுக்கதைகள் அல்ல. மாறாக, வாழ்க்கை நெறிமுறை ஆகும்.

அது ஒரு செயல் திட்டம் ஆகும். அதன்படி செயல்படுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீது கடமையாகும்.

நாம் இங்கு இடம்பெயர்ந்து வந்த பிறகு,இந்த நாடுகளில் வந்த பிறகு இந்த நோக்கத்தை மறந்துவிட்டால், மேலும் உலகியல் மும்முரங்களில் மூழ்கிவிட்டால், தமது குடும்பத்தின் சூழலை திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப ஆக்குவதற்கு முயற்சி செய்யவில்லையென்றால் பின்னர் நமது பிள்ளைகளும், சந்ததிகளும் மார்க்கத்திலிருந்து விலகிக் கொண்டே சென்றுவிடுவர். மேலும், இந்த விஷயம் நன்றி செலுத்துவதற்கு பகரமாக அல்லாஹ்வின் அருட்களை மறுக்கக் கூடிய விஷயமாக அமைந்து விடும். எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் அவர் பழைய அஹ்மதியாக இருந்தாலும், புதிய அஹ்மதியாக இருந்தாலும், இங்கு பிறந்த அஹ்மதியாக இருந்தாலும் அல்லது வெளியிலிருந்து இங்கு ஹிஜ்ரத் செய்து வந்த அஹ்மதியாக இருந்தாலும் அவர் மிகவும் சிந்திப்பதற்கு அவசியம் உள்ளது. அதாவது, அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் அவனது இறை வணக்கத்திற்கான உரிமையை வழங்குவதும் அவனது வேதத்தை ஓதுவதும், புரிவதும் அதன்படி செயல்படுவதும் நமது அடிப்படையான நோக்கமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் பைஅத்திற்குரிய உரிமையை செலுத்த முடியும்.

எவர்கள் ஹிஜ்ரத் செய்து வந்துள்ளார்களோ அவர்கள் இங்கு வந்த பிறகு உலகத்தின் எதிர்ப்பிலிருந்து தப்பித்து விட்டனர். ஆனால், அவர்கள் மார்க்கத்தின் படி வழி நடப்பவர்களாகவும், திருக்குர்ஆனை புரியக் கூடியவர்களாகவும் இல்லையென்றால் பின்னர் அவர்கள் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுதாரர்களாக முடியாது. அதேபோன்று, புதிதாக வரக்கூடிய அஹ்மதிகளாக இருக்கட்டும் அல்லது இங்கு வசித்து வருகின்ற பழைய அஹ்மதிகளாக இருக்கட்டும். அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, வெறும் பைஅத் செய்வதால் மட்டும் நோக்கம் நிறைவேறி விடாது. மாறாக நாம் நம்மை இஸ்லாமிய போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்ளும்போதுதான் நோக்கம் நிறைவேறும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உண்மையை கூறுகின்றேன். இது ஒரு விழா ஆகும். இதனை அல்லாஹ் நற்பேறு பெற்றவர்களுக்காக உருவாக்கியுள்ளான். இதிலிருந்து பயன் பெறுபவர்களே அருளுக்குரியவர்கள். நாம் எதனை பெற வேண்டுமோ அதனை பெற்றுவிட்டோம் என்று என்னுடன் தொடர்பு வைத்துள்ள நீங்கள் ஒருபோதும் பெருமை கொண்டு விடாதீர்கள். தமது கடும் எதிர்ப்பு மற்றும் அவமரியாதையின் மூலமாக இறைவனின் கடுமையான கோபத்திற்கு ஆளாகியுள்ள அந்த நிராகரிப்பாளர்களைக் காட்டிலும் நீங்கள் நற்பேறுக்கு மிக அருகில் வந்துவிட்டீர்கள் என்பது உண்மை ஆகும். நீங்கள் நல்லெண்ணம் கொண்டு இறைவனின் கோபத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள கவலை அடைந்தீர்கள் என்பதும் உண்மை ஆகும். ஆனால், உண்மையான விஷயம் இதுவே ஆகும். அதாவது, தற்போது இறைவன் நிரந்த வாழ்விற்காக உருவாக்கியுள்ள நீரூற்றிற்கு அருகில் நீங்கள் வந்தடைந்துவிட்டீர்கள். ஆயினும், நீங்கள் (அந்த) தண்ணீரை பருக வேண்டியது இன்னும் மீதமிருக்கின்றது.

**இறைவன் உங்களது தாகத்தை தணிக்க வேண்டும் என்று அல்லாஹ்வின் அருளைக் கொண்டும், கருணையைக் கொண்டும் அவனிடம் நற்பேறு வேண்டுங்கள். ஏனெனில் இறைவனின்றி எதுவும் நடக்க முடியாது. இறைவனின் அருள் இல்லையென்றால், எதுவும் நடக்க முடியாது. எனவே எப்போதும் அல்லாஹ்வின் அருளை வேண்டுங்கள்.**

கூறினார்கள்: நான் இதனை நிச்சயமாக அறிகின்றேன். எவர் இந்த நீரூற்றிலிருந்து (தண்ணீர்) அருந்துவாரோ அவர் ஒருபோதும் மாண்டு போக மாட்டார். ஏனெனில், இது வாழ்வளிக்கும் தண்ணீர் ஆகும். மேலும், அழிவிலிருந்தும் பாதுகாக்கின்றது. ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

இந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்கு என்ன வழி? அது இதுவே ஆகும். அதாவது, அல்லாஹ் நிலைநாட்டியுள்ள உரிமைகளை வழங்க வேண்டும். அதனை முழுமையான முறையில் செலுத்த வேண்டும். அவற்றில் ஒன்று, இறைவனுக்குரிய உரிமை மற்றொன்று படைப்பினங்களுக்குரியது.

اَشۡهَدُ اَنۡ لَّاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ

என்ற ஷஹாதத்தின் மூலமாக நீங்கள் ஒப்புக் கொண்டிருப்பதை போன்று உங்களது இறைவனை ஏகனாகவும், அவனுக்கு (எந்த)இணையுமில்லை என்றும் கருதுங்கள். அதாவது, அல்லாஹ்வைத் தவிர எந்த நேசத்திற்குரியவரும், நோக்கமும் இல்லை என்பது அந்த கலிமா ஆகும். இது எப்படிபட்ட அன்பிற்குரிய வாக்கியம் என்றால், இது யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அல்லது மற்ற இணைவைப்பாளர்களுக்கும் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தால் மேலும் அவர்கள் அதனை புரிந்து கொண்டிருந்தால் அவர்கள் ஒருபோதும், ஒருபோதும் அழிந்து நாசமாகியிருக்க மாட்டார்கள். இந்த ஒரு கலிமா இல்லாமல் போன காரணத்தினாலேயே அவர்கள் மீது அழிவும், துன்பமும் இறங்கியது. அவர்களின் ஆன்மா பயனற்றதாக மாறி அழிந்து போனது. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 184-185, பதிப்பு 1984)

எனவே பாருங்கள்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எவ்வாறு ஆறுதல் நல்கியுள்ளார்கள்! மேலும், உத்திரவாதம் நல்கியுள்ளார்கள்! நீங்கள் பைஅத் செய்து, மேலும் விஷயங்களை ஒப்புக் கொண்டு அந்த நீரூற்றிற்கு அருகில் வந்தடைந்துவிட்டீர்கள். நீங்கள் அதிலிருந்து தண்ணீர் அருந்தினால், பயன் பெற்றீர்கள் என்றால், வெறும் பேச்சளவில் மட்டும் அல்லாமல் அமலும் செய்தீர்கள் என்றால் பின்னர் உங்களுக்கு இந்த உத்திரவாதம் வழங்கப்படுகிறது. அதாவது (அந்நிலையில்) ஒருபோதும் உங்களுக்கு ஆன்மீக அழிவு ஏற்படாது. ஏனெனில், திருக்குர்ஆனின்

தூதுச் செய்தியையும், அல்லாஹ்வின் கட்டளைகளையும் நிலைபெறச் செய்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் வருகை தந்துள்ளார்கள்.

**அன்னார் (அலை) கூறினார்கள்: பைஅத் செய்வது மட்டும் போதுமானது என்று கருதாதீர்கள். மாறாக, அல்லாஹ் அமல்களையும் விரும்புகின்றான். எவர் அமல் செய்வாரோ அவர் அல்லாஹ்வின் அருட்களிலிருந்து வெறுமையாக இருக்க மாட்டார். அவர் ஒருபோதும் அழிந்துபோக மாட்டார்.**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

என்ற கலிமா உங்களுடைய உட்புறம் மற்றும் வெளிப்புறத்தின் குரலாக மாறிவிடும்போதுதான் இந்த செயல் நிலை உருவாகும். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் உங்களின் நேசத்திற்குரியவராக இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் திருப்தியை தவிர வேறு எந்த பொருளும் தேடலாக இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடவுங்கள்.

**தற்போது ஒவ்வொருவரும் இந்த விஷயத்திலிருந்து தம்மை ஆய்வு செய்து கொள்ள முடியும். அதாவது, நாம் கலிமாவை ஓதுகின்றபோது உண்மையிலேயே எல்லா விஷயங்களை விடவும் அதிகமாக அல்லாஹ் நமது நேசத்திற்குரியவனாக இருக்கின்றானா? அவனது திருப்தியை பெறுவது நமது நோக்கமாக உள்ளதா? நாம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாக கீழ்படிந்து வருகின்றோமா? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.**

**தொழுகைக்கான நேரங்களில் தொழுவதன் பக்கம் நமக்கு உடனடியாக கவனம் ஏற்படவில்லையென்றால், நாம் உலகியல் பணிகளை விட்டுவிட்டு அல்லாஹ்வின் குரலுக்கு உடனடியாக செவி சாய்த்தவாறு தொழுகைக்காக ஆஜராகவில்லையென்றால், அந்நிலையில் நாம் வெறும் வாயளவில் கலிமா கூறுபவர்களாக இருக்கின்றோம்.** மேலும், ஒரு மறைவான ஷிர்க் உள்ளது என்று பொருள். நமது உலகியல் வியாபாரங்கள் அல்லாஹ்விற்கு எதிரில் நிற்கின்றன என்று பொருள்.

ஒரு நம்பிக்கையாளர் இந்த நம்பிக்கையில் நிலைபெற்றிருக்கின்றார். நிலை பெற்றிருக்க வேண்டும். அதாவது, எனது வியாபாரங்களிலும், எனது பணிகளிலும் அல்லாஹ்வின் அருளின் மூலமே பரக்கத் ஏற்படுகின்றது. மேலும் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நிலையிருந்தால், பின்னர் தனது உலகப் பணிகள் அல்லாஹ்வின் குரலுக்கு எதிராக வந்து நின்றுவிடும் என்பது எவ்வாறு சாத்தியம்? ஒருவேளை அவ்வாறு வந்து நின்றால், பின்னர் நாம் கலிமாவின் ஆன்மாவையே புரியவில்லை (என்று பொருள்). நாம் வாயினால் கலிமா கூறுகின்றோம். ஆனால் செயல் நமது கூற்றுகளுக்கு பொருத்தமானதாக இல்லை. நாம் நீரூற்றிற்கு அருகில் வந்துவிட்டோம். ஆனால், தண்ணீர் அருந்துவதற்காக கைகளை நீட்டவில்லை (என்று பொருள்).

எனவே, ஒருவேளை இவ்வாறான நிலைமை இருந்தால் பின்னர், பைஅத்திற்குரிய உரிமை வழங்கப்படவில்லை என்று அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்.

இந்த கலிமா ஷஹாதத் இந்த விஷயத்தை மட்டுமே போதிக்கவில்லை. மேலும், அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்கவேண்டும் என்பதன் பக்கம் மட்டுமே கவனமூட்டுதில்லை. மாறாக, அடியார்களின் எந்த உரிமைகளை வழங்குவதன் பக்கம் அல்லாஹ் அறிவுறுத்தியுள்ளானோ, மேலும் கட்டளை வழங்கியுள்ளானோ அதன்படி அமல் செய்வதன் பக்கமும் கவனமூட்டுகிறது. மனிதன் இந்த இரண்டு உரிமைகளையும் வழங்கும்போதுதான் உண்மையான நம்பிக்கையாளர் என்றழைக்கப்படுவார். மேலும், அப்போதுதான், ஓர் உண்மையான நம்பிக்கையாளர், உண்மையான அஹ்மதி முஸ்லிம், பைஅத்தின் உரிமைகளை வழங்குவார்.

பின்னர், அன்னார் (அலை) தமது பைஅத்தின் கீழ் வரக்கூடியவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

**நீங்கள் உலகவாதிகளைப் போன்று இருந்தால் பின்னர் நீங்கள் எனது கையில் செய்த தவ்பாவிலிருந்து எந்த பயனும் பெறவில்லை. எனது கையில் தவ்பா செய்வது என்பது ஒரு மரணத்தை விரும்புகின்றது.** அப்போதுதான் ஒரு புதிய வாழ்க்கையில் மற்றொரு பிறப்பை பெறுவீர்கள். அதாவது, பைஅத் செய்த பிறகு உங்களுக்கு ஒரு புதிய ஆன்மீக வாழ்க்கை கிடைக்க வேண்டும். அந்த ஆன்மீக வாழ்க்கை கிடைக்கவில்லையென்றால், மேலும் (முந்தைய) அதே உலகியல் ஆசைகளும், முன்னுரிமைகளும் இருக்கின்றன என்றால் பின்னர் அதுபோன்ற பைஅத் எந்த பயனையும் தராது.

கூறினார்கள்: பைஅத் உள்ளத்தால் நடைபெறவில்லையென்றால், அதற்கு எந்த விளைவும் இருக்காது.

என்னிடம் பைஅத் செய்வதற்கு இறைவன் உள்ளத்தின் ஒப்புதலை விரும்புகின்றான். எனவே எவர் என்னை உண்மையான உள்ளத்துடன் ஒப்புக் கொள்கிறாரோ மேலும் எவர் தனது பாவங்களிலிருந்து (விலகி) உண்மையான தவ்பா செய்கின்றாரோ. அத்தகைய நபரின் பாவங்களை தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தது போன்று கஃபூர் மற்றும் ரஹீமாக இருக்கும் இறைவன் மன்னித்துவிடுகின்றான். வானவர்கள் அவரை பாதுகாக்கின்றனர்.

அவர் முற்றிலும் களங்கமற்றவராகி-விடுகின்றார். கூறினார்கள்: ஒரு கிராமத்தில் ஒரு நல்ல மனிதர் இருக்கின்றார் என்றால், அல்லாஹ் அந்த நல்லவரின் காரணமாக அந்த கிராமத்தை அழிவிலிருந்து பாதுகாத்துவிடுகின்றான்.

அழிவு வரும்போது பின்னர் அனைவரின் மீதும் வருகின்றது. ஆயினும் கூட அவன் தனது அடியார்களை ஏதாவது ஒரு வடிவில் காப்பாற்றிவிடுகின்றான். ஒருவர் நல்லவராக இருந்தாலும், அவருக்காக மற்றவர்களும் பாதுகாக்கப்படுகின்றனர். இதுவே இறைவனின் நடைமுறை ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 263, பதிப்பு 1984)

எனவே இந்த அடிப்படையான விதிமுறைகளை நினைவிற்கொள்ள வேண்டும். அல்லாஹ் தனது தூய அடியார்களின் துஆக்களை கேட்கின்றான். மேலும் அவர்களின் நற்செயல்களை ஒப்புக் கொள்கின்றான். எனவே, நமது இறைவணக்கங்கள் அல்லாஹ்விற்கு மட்டுமானதாகவே இருக்க வேண்டும் என்பதற்காகவும், நமது அமல்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதற்காகவும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

**நம் மீது மிகவும் அபாயகரமான அழிவின் மேகங்கள் சூழ்ந்துள்ளன என்பது இன்றைய நாட்களில் நிலவும் உலகின் நிலைமைகளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.** ரஷ்யா அணு ஆயுதங்களைப்

**பயன்படுத்தினால் பின்னர், அதற்கு எதிர் தரப்பிலிருந்தும் பதில் நடவடிக்கை இருக்கும். பின்னர் நிகழும் அழிவுகள் உலகின் முடிவிற்கு காரணியாக அமையும் என்று அமெரிக்காவின் அதிபர் நேற்று இந்த விஷயத்தை கூறியுள்ளார். எனவே நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று இந்த நாடுகளில் வசிப்பவர்கள் கருதாதீர்கள். மேலும் ஹிஜ்ரத் செய்து இங்கு வந்துள்ளவர்களும் அவ்வாறு எண்ணம் கொள்ளாதீர்கள். எந்த ஓர் இடமும் பாதுகாப்பானதல்ல. இந்த வல்லரசு நாடுகளின் தலைவர்களின் மூளை மாறிவிடும் போது பின்னர் அவர்கள் எதனையும் பார்ப்பதில்லை.**

எனவே இந்த நிலைமைகளில் துஆக்கள் செய்வதும், தமது இறை வணக்கங்களை அல்லாஹ்விற்கு மட்டுமே உரியதாக ஆக்கிக் கொள்வதும் அஹ்மதிகளின் பணியே ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியது போன்று நல்ல மக்களுக்காக, தனது தூய அடியார்களுக்காக அல்லாஹ் மற்றவர்களையும் காப்பாற்றிவிடுகின்றான். மேலும், இதுவே அல்லாஹ்வின் வேதத்திலிருந்து, திருக்குர்ஆனிலிருந்து நமக்கு தெரிய வருகின்றது. எனவே, **இங்கு வந்து நாம் பாதுகாப்பு பெற்றுவிட்டோம். நமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாப்பு பெற்றதாகிவிட்டது என்று எவரும் இந்த எண்ணத்தில் இருக்கக் கூடாது. இன்னும் கூறப்போனால் நாம் மிகவும் அபாயகரமான காலத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். இது போன்ற நிலைமைகளிலிருந்து ஒருவரால் காப்பாற்ற முடியும் என்றால், அது அல்லாஹ்வால் மட்டுமே ஆகும்.**

எனவே நீங்களும் அவனுக்கு முன்னால் குனியுங்கள். மேலும் உங்களின் சந்ததிகளையும் அல்லாஹ்விற்கு முன்னால் குனியச் செய்யக் கூடியவர்களாக ஆகிவிடுங்கள். அப்போதுதான் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும். மேலும் உங்களது சந்ததிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இந்த உலகம் நம்மையும் பாதுகாக்காது. நமது சந்ததிகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்காது. இன்னும் கூறப்போனால், கலிமாவின் உரிமையை வழங்கக் கூடியவர்களாக நாம் திகழ்ந்தால் பின்னர் அல்லாஹ் நமது பணிவான துஆக்கள் மற்றும் நற்செயல்களின் காரணமாக உலகத்தை பாதுகாத்து விடுவான்.

எனவே இன்றைய காலத்தின் நிலைமைகளில் இந்த அடிப்படையிலும் அதிகமாக துஆக்கள் செய்யுங்கள். உலகத்தின் நிலைமைகள் உச்சத்தை தாண்டி மோசமாகிவிடுவதற்கு முன்னர் துஆக்கள் செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உரிய காலத்தில் செய்யப்படுவதே நன்மையாகும். காலம் தாழ்த்தி ஒன்றை செய்தாலும் அதனால் பயனல்ல. இயல்பின் வேகத்தால் மட்டுமே செய்யப்படும் நன்மையை இறைவன் ஒப்புக் கொள்வதில்லை. கப்பல் கவிழும்போது அனைவரும் அழுகின்றனர்.

கப்பல் கவிழத் தொடங்கும்போது அனைவரும் அழத் தொடங்கிவிடுகின்றனர். ஆனால், அந்த அழுகையும், கூக்குரலும் இயல்பின் தேட்டத்தின் விளைவாக இருக்கின்றது. எனவே அந்த நேரத்தில் அது பயனளிப்பதில்லை. அது அதற்கு முன்னரே இருந்திருந்தால் தான் பயனளிக்கும். அமைதி நிலவிய போது அது அமைந்திருக்க வேண்டும்.

கூறினார்கள்: நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இறைவனை அடைவதற்கு இதுவே வழிமுறையாகும். எவர் குறித்த நேரத்திற்கு முன்னரே விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கின்றாரோ, அதுவும் தம் மீது மின்னல் விழுவது போன்ற எச்சரிக்கை அவரிடம் இருக்க வேண்டும். அத்தகைய நபர் மீது ஒருபோதும் அது விழாது. மின்னல் விழப்போகின்றது என்று அவர் சிந்தித்தால், விழிப்பாக இருந்தால் பின்னர் எவ்வளவு மின்னல் வெட்டினாலும் அவர் மீது மின்னல் விழாது. ஆனால், எவர் மின்னல் விழுவதைக் கண்டு கூக்குரலிடுகின்றாரோ, அவர் மீது மின்னல் விழும். மேலும் அவரை அழித்து விடும். அவர் மின்னலுக்கு அஞ்சுகின்றாரே தவிர இறைவனுக்கு அஞ்சவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 265, பதிப்பு 1984)

**எனவே, இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றால் இப்போது ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக நம்மை எச்சரித்து விட்டார்கள்.** தற்போது அபாயத்தின் மேகம் சிறிதளவே சூழ்ந்துள்ளது அல்லது குறைந்தபட்சம் எப்படி உள்ளது என்றால் விரும்பினால் அவற்றை கட்டுப்படுத்திவிட முடியும். ஆயினும் எந்நேரமும் அது பரவிவிடக் கூடும்.

எனவே, அஹ்மதிகளின் ஈமானும், அல்லாஹ்வுடனான தொடர்பும், துஆக்களும் உலகை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

துஆக்களின் பக்கம் மேலும் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! நீங்கள் சிறிது உழைத்து நிலத்தை தயார் செய்யும்போதுதான் நன்மைக்கான நம்பிக்கையும் ஏற்படுகின்றது. இவ்வாறு அமைதி நிறைந்த காலம் உழைப்பிற்கானதாகும். தற்போது நீங்கள் இறைவனை நினைவுகூர்ந்தால் பின்னர் அதன் இன்பத்தை பெறுவீர்கள். உலகப் பணிகளை விட்டுவிட்டு தொழுகைகளுக்காக(பள்ளிக்கு) வருகை தருவது கடினமானதாக இருக்கலாம்.

அன்னார் (அலை) மிகவும் தெளிவாக கூறியுள்ளார்கள்: பாருங்கள்! உலகப் பணிகளுக்கு எதிரில் தொழுகைகளில் ஆஜராகுவது கடினமானதாக இருக்கலாம். மேலும் தஹஜ்ஜுத் தொழுகை என்பது இன்னும் கடினமாக இருக்கும். கூறினார்கள்:

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

தற்போது நீங்கள் உங்களை அதற்கு பழக்கமுடையவராக ஆக்கிக் கொண்டால் பின்னர் எந்த ஒரு துன்பமும் இருக்காது. நீங்கள் துஆக்கள் செய்தால் பின்னர் கண்ணியமும், கருணையும் மிக்க இறைவன் கருணை செய்வான். கூறினார்கள்: பாருங்கள்! தற்போது நீங்கள் பணி செய்கின்றீர்கள் (அதாவது, உலக பணிகளும் கூட நீங்கள் செய்கின்றீர்கள்). உங்கள் ஆன்மாவின் மீதும் குடும்பத்தினரின் மீதும் நீங்கள் கருணை செய்கின்றீர்கள் (அதாவது, அவர்களின் தேவைகளைக் குறித்து கவலை கொள்கின்றீர்கள்). பிள்ளைகள் மீது உங்களுக்கு கருணை ஏற்படுகின்றது. (உலகியல் ரீதியில் நீங்கள் கருணை காட்டுவது ஒரு வழிமுறையாகும்). நீங்கள் தற்போது அவர்கள் மீது கருணை காட்டுகின்றீர்கள். மற்றொரு வழிமுறையும் உள்ளது. (அந்த வழிமுறை என்பது என்ன?) அது தொழுகைகளில் அவர்களுக்காக துஆக்கள் செய்வது ஆகும். அல்லாஹ் இந்த துன்பத்தை அகற்றிவிடுவானாக. மேலும் தண்டனையிலிருந்து பாதுகாப்பானாக என்று ருகூவிலும் துஆக்கள் செய்யுங்கள். பின்னர் ஸஜ்தாக்களிலும் துஆக்கள் செய்யுங்கள்.

எவர் துஆ செய்கின்றாரோ அவர் இழப்பிற்குரியவராக இருப்பதில்லை.

கவனமற்று இருப்பவரைப் போன்றும், தீயவரைப் போன்றும், துஆக்கள் செய்யக் கூடியவர் அழிக்கப்படுவது ஒருபோதும் சாத்தியமல்ல. அவ்வாறு இல்லையென்றால் பின்னர் இறைவன் ஒருபோதும் அடையாளம் காணப்பட முடியாது. அவன் தனது உண்மையான அடியார்களையும், மற்றவர்களையும் வேறுபடுத்திவிடுகின்றான். ஒருவர் காப்பாற்றப்படுகின்றார். மற்றொருவர் பிடிக்கப்படுகின்றார். சுருக்கமாக, முழுமையான முறையில் உங்களிடத்தில் உண்மையையும், தூய்மையையும் உருவாக்கிக் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 266, பதிப்பு 1984)

ஆக, இந்த விஷயங்கள் பிளேக் நோய் பரவியிருந்த அந்தக் காலத்தில் கூறப்பட்ட விஷயங்கள் ஆகும். ஆனால், இன்றைய நாட்களிலும் உலகளாவிய அழிவின் அடையாளங்கள் தென்பட்டு வருகின்றன. நான் கூறியதுபோன்று, குறிப்பாக நாம் அல்லாஹ்வின் முன் குனிவதும் அதற்கு அவசியம் ஆகும். மேலும், இதுவே நம்மை நாம் பாதுகாத்துகொள்வதற்கும், உலகை பாதுகாப்பதற்குமான ஒரே வழியாகும்.

அடுத்து, ஜமாஅத்திற்கு உயர் நல்லொழுக்கத்திற்கான அறிவுரையையும் அன்னார் (அலை) குறிப்பாக செய்துள்ளார்கள். ஏனெனில், உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதும் அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளை ஆகும்.

எனவே, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒழுக்கத்தை சீராக வைப்பது மிகவும் கடினமான பணியாகும். **மனிதன் தன்னை ஆய்வு செய்து கொண்டிருக்காதவரை இந்த சீர்திருத்தம் நடைபெற முடியாது. தம்மை ஆய்வு செய்து கொண்டிருக்காத வரை, நாள் முழுவதும் பேசி வரும் பேச்சுகளை ஆய்வு செய்து வராத வரை, எவ்வாறு வாழ்க்கையை கழித்தோம்? நாளை கழித்தோம்? என்று ஆய்வு செய்து வராத வரை, என்ன நன்மை செய்தோம்? என்ன தீமை செய்தோம்? என்ன நல்ல விஷயம் பேசினோம்? என்ன தவறான விஷயம் பேசினோம்? என்று இந்த ஆய்வுகளை செய்து வராத வரை சீர்திருத்தம் நடைபெற முடியாது.**

கூறினார்கள்: **நாவிலான தீய ஒழுக்கங்கள் பகைமையை உருவாக்குகின்றன. எனவே எப்போதும் தமது நாவை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.**

கூறினார்கள்: பாருங்கள்! தனது நலன் விரும்பியாக கருதும் ஒருவரிடம் எவரும் பகைமை பாராட்ட மாட்டார். அவ்வாறிருக்க, தனது ஆன்மாவின் மீது கருணை காட்டாத, தனது உயிரை அபாயத்தில் வீழ்த்திக் கொள்ளும் அந்த நபர் எவ்வளவு அறிவிலி ஆவார்! அவரோ தமது ஆற்றல்களிலிருந்து நல்ல பணிகளை பெறுவதில்லை. மேலும் நல்லொழுக்க ஆற்றல்களை சீர்படுத்திக் கொள்வதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 346, பதிப்பு 1984)

அதாவது அறிவுக்கூர்மையின் தேட்டம் என்னவென்றால், மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள ஆற்றல்களுக்கும், திறமைகளுக்கும் எந்த அளவிற்கு பயிற்சி கொடுக்க வேண்டும் மேலும், எந்த அளவில் அதனை பயன்படுத்த வேண்டும் என்றால் மனிதனின் ஒவ்வொரு செயலிலும் உயர் நல்லொழுக்கங்கள் வெளிப்பட வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களில் தீய ஒழுக்கத்தை வெளிப்படுத்தினால் பின்னர் உங்களது உயிரை நீங்களே அபாயத்தில் வீழ்த்திக் கொள்வீர்கள்.

இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, எங்கு தனிப்பட்ட விவகாரங்களில் பொறுமை, கட்டுப்பாடு மற்றும் உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துவதற்கும், சண்டை சச்சரவுகளிலிருந்து விலகியிருப்பதற்கும் இஸ்லாம் போதிக்கின்றதோ அங்கு சட்டத்தின் எல்லைக்குள் இருந்து கொண்டு மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்துவதன் பக்கமும் கவனமூட்டுகின்றது.

எனவே அந்த மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்துவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நபர் உயர் அமைப்பிலிருந்து அதாவது இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து பகிரங்கமாக வெளியேறி ஏசிபேசுகின்றார் என்றால், மேலும் அபாயகரமான பகைமை கொள்கின்றார் என்றால் அவரது விவகாரம் வேறு ஆகும். சஹாபிகளுக்கும் கடினங்களை எதிர்கொள்ள நேரிட்டது. மேலும், தமது சில உறவினர்கள் தரப்பிலிருந்து இஸ்லாத்திற்கு எதிரான அவமரியாதைகளை அவர்களுக்கு கேட்க நேரிட்டது. அப்போது மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தபோதிலும் அவர்களுக்கு இஸ்லாத்திற்கு முன்னுரிமை வழங்க நேரிட்டது. (அதாவது நெருங்கிய தொடர்புகள் இருந்தபோதிலும் அவர்களிடமிருந்து விலகநேரிட்டது)

கூறினார்கள்: ஒரு நபர் இஸ்லாத்தின் கொடிய எதிரியாக இருக்கின்றார். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏசிபேசுகின்றார் என்றால் அவரிடம் தொடர்பை முறித்துக் கொள்வதற்கும், வெறுப்பை வெளிப்படுத்துவதற்கும் அத்தகைய நபர் தகுதி படைத்தவர் ஆவார். ஆயினும், ஒருவர் தனது செயல்களில் சோம்பலை வெளிப்படுத்தக் கூடியவராக இருக்கின்றார் என்றால் அவரது தவறுகளை மன்னிப்பதற்கும், அவரிடம் வைக்கப்பட்டுள்ள தொடர்புகளில் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் அளவில் பார்த்துக் கொள்வதற்கும் அவர் தகுதி படைத்தவர் ஆவார். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 346)

அதாவது, ஒருவர் எதிர்க்க-

வில்லையென்றால் பின்னர் அவருடன் தொடர்பு வையுங்கள். நல்ல முறையில் தொடர்பு வையுங்கள். ஆனால், வெளிப்படையாக எதிர்க்கின்றார் அல்லது இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏசிபேசுகின்றார் என்றால், புரிய வைத்த பிறகும் விலகவில்லையென்றால் பின்னர் அங்கு மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். மேலும், அதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விவகாரத்திலும் ஒவ்வொரு அஹ்மதியும் மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எந்த நபர் புரிய வைத்த பிறகும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எதிரான சிந்தனையிலிருந்து விலகுவதில்லையோ அந்த நபரிடமும் நாம் நட்புக் கரத்தை நீட்ட முடியாது. மேலும் எந்த ஓர் அஹ்மதியின் தன்மானமும் அதனை பொறுத்தும் கொள்ளாது.

உங்களில் பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்துள்ள நபர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றீர்கள். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எதிராக எந்த அளவிற்கு மிக மோசமான வார்த்தைகளை, பேச்சுகளை பெயர் தாங்கி முல்லாக்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பதில் அவர்களுக்கு சொந்த அனுபவம் இருக்கும். அத்தகைய நபர்களிடம் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்றோ அல்லது அவர்களின் தீங்கு அவர்கள் பக்கமே திரும்புவதற்கு துஆ செய்யக் கூடாது என்றோ நம்மிடம் கூறப்பட்டால் நமது தன்மானம் அதனை சகித்துக் கொள்ளாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறிய அதே வழிமுறை இங்கும் பொருந்தும். ஆயினும், நாம் அதுபோன்ற மக்களுக்கு எதிராக சட்டத்தையும் கையில் எடுக்க மாட்டோம். ஏனெனில் எந்நிலையிலும், சட்டத்தை உங்கள் கையில் எடுக்கக் கூடாது என்பதும் இஸ்லாமிய போதனையின் அங்கமாகும்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பைஅத் செய்த பிறகு அஹ்மதிகளிடம் இருக்க வேண்டிய மற்றொரு சிறப்பை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: பரஸ்பரம் அன்பையும், சகோதரத்துவத்தையும் உருவாக்குங்கள்.

இதற்கு போதனை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

**தங்களுக்குள் பரஸ்பரம் உண்மையான அனுதாபம் கொள்ளாத வரை நமது ஜமாஅத்தில் பசுமை ஏற்படாது. எவருக்கு முழுமையான ஆற்றல் வழங்கப்பட்டுள்ளதோ அவர் பலவீனமானவருக்கு உதவி செய்யட்டும். அதாவது, வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தி பலவீனமானவர்களுடன் அன்பு செலுத்த வேண்டுமே தவிர வெறுப்பை வெளிப்படுத்தக் கூடாது.**

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவர் மற்றவரிடம் தடுமாற்றத்தைக் கண்டு நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளாமல் வெறுப்புடன் சிலர் நடந்து கொள்கின்றனர் என்பதை நான் செவியேற்கின்றேன். இந்த வழிமுறை சரியானதல்ல.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒருவர் மற்றவரின் குறைகளை திரையிடும்போதும், உண்மையான சகோதரர்களைப் போன்று ஒருவர் மற்றவரிடம் நடந்து கொள்ளும்போதுதான் அது ஜமாஅத்தாக இருக்கும்.

அன்னார் (அலை) அவர்கள் மிகவும் வேதனையுடன் கூறினார்கள்:

ஜமாஅத்தில் உட்பூசல்கள் ஏற்படுகின்ற இந்த வழிமுறை சரியானதல்ல. சஹாபிகளும் தங்களுக்குள் பரஸ்பர அன்பையும், சகோதரத்துவத்தையும் உருவாக்கினார்கள். மேலும் ஒரு ஜமாஅத்தாக ஆகிவிட்டனர்.

**தனது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் சஹாபிகளைப் போன்று சகோதரத்துவ பந்தத்தை நிலை நாட்ட வேண்டும் என்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் விரும்புகின்றார்கள்.**

கூறினார்கள்: அதேபோன்று இறைவன் இந்த அமைப்பை நிலைநாட்டினான். (அதாவது சஹாபிகளின் அமைப்பை போன்ற அமைப்பை உருவாக்கியுள்ளான்). மேலும், அதுபோன்ற சகோதரத்துவத்தை அவர்கள் இங்கு நிலைநாட்ட வேண்டும். இறைவன் மீது எனக்கு அதிக நம்பிக்கை உள்ளது. கூறினார்கள்: பாருங்கள்! ஒருவர் மற்றவருக்கு எதிராக முறையீடு செய்வதும், மனதை புண்படுத்துவதும், கடுமையாக பேசி ஒருவர் மற்றவரின் உள்ளத்திற்கு வேதனையை ஏற்படுத்துவதும், பலவீனமானவர்கள் மற்றும் வறியவர்களை ஏளனமாக கருதுவதும் பெரும் பாவங்களாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 348-349, பதிப்பு 1984)

எனவே ஒருவர் மற்றவரின் உணர்வுகளை கருத்தில் கொள்வது உயர் நல்லொழுக்கம் ஆகும். இவை நடைபெறும் போதும் தான் நம்மால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியும். அப்போதுதான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் அன்னாரின் ஜமாஅத் தொடர்பாக செய்துள்ள வாக்குறுதிகளின் அருட்களுக்கு நாம் வாரிசுகளாக ஆக முடியும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருட்களை பெறக் கூடியவர்களாக நாம் ஆக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நேரத்தில் இந்தியாவின் பல்வேறு சமுதாயங்களும், கோத்திரங்களும் ஜமாஅத்தில் இணைந்தன. தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்யப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஏற்ப உலகின் பல்வேறு சமுதாயங்கள், கோத்திரங்கள் மற்றும் இனத்தைச் சார்ந்தவர்களை அல்லாஹ் ஜமாஅத்தில் இணைத்துவிட்டான். மேலும் இணைத்து வருகின்றான். எனவே, இது பல்வேறு சமுதாயங்கள் மற்றும் இனங்களைச் சார்ந்த மக்கள் மீது அல்லாஹ் செய்த அருளாகும். அவன் அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்கும், அன்னார் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் ஜமாஅத்தில் இணைவதற்கும் அவர்களுக்கு நற்பேறு வழங்கியுள்ளான். மேலும், ஒரு சமுதாயமாக்கிவிட்டான்.

நீங்கள் பரஸ்பரம் சகோதரர் ஆவீர்கள் என்று இதன் பக்கம் அன்னார் (அலை) கவனமூட்டியுள்ளார்கள். கூறினார்கள்: தந்தை வேறு வேறு நபர்களாக இருக்கலாம். ஆயினும், இறுதியில் உங்கள் அனைவரின் ஆன்மீகத் தந்தையும் ஒருவரே ஆவார். அவர்கள் ஒரே மரத்தின் கிளைகள் ஆவர். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 349, பதிப்பு 1984)

நாம் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள்? நாம் வெள்ளை இனத்தைச் சார்ந்தவர்களா? அல்லது ஆஃப்ரிக்கர்களா? அமெரிக்கர்களா? அல்லது பாகிஸ்தானியர்களா? அல்லது

இந்தியர்களா? அல்லது ஹஸ்பானி இனத்தைச் சார்ந்தவர்களா? என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த பிறகு நாம் ஒரு ஆன்மீகத் தந்தையின் பிள்ளைகளாகிவிட்டோம். மேலும் இனம், நிறம், சமுதாயம் போன்றவற்றின் காரணமாக எவருக்கும் எவர் மீதும் எந்த மேன்மையும் இல்லை. ஏனெனில், **நமது ஆன்மீகத் தந்தை ஒருவரே ஆவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி குத்பாவில் இந்த அறிவிப்பையே செய்துள்ளார்கள். எனவே நாம் இந்த விஷயத்தை புரிந்தவாறும், ஒன்றுபட்டவாறும் பணி செய்வோம் என்றால், மேலும் ஒருவர் மற்றவரின் உணர்வுகளை கருத்தில் கொள்வோம் என்றால் பின்னர் இன்ஷாஅல்லாஹ் நமக்கு அல்லாஹ் முன்னேற்றங்களை வழங்கிக் கொண்டே இருப்பான்.**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது ஜமாஅத்தை அல்லாஹ் ஒரு முன்மாதிரியாக ஆக்க விரும்புகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 9, பதிப்பு 1984)

வெறும் மேலோட்டமான பேச்சுகள் மூலமும், ஆழமான அமல்கள் இல்லாமலும் மனிதனால் முன்மாதிரியாக திகழ முடியுமா? முன் மாதிரியாக திகழ்வதற்கு பெரும் ஜிஹாது செய்ய வேண்டியுள்ளது. மிகவும் உழைக்க வேண்டும்.

தமது இறை வணக்கங்களின் தரத்தை நிலைநாட்டியவாறும், தமது நல்லொழுக்க நிலைகளை சரிசெய்தவாறும், பரஸ்பரம் அன்பு, சகோதரத்துவத்தின் தொடர்புகளை நிலைநாட்டியவாறும் நாம் முன்னுதாரணமாக ஆகி வருகின்றோமா? இல்லையா? என்று பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமது உயர் தரங்களை அடைவதன் பக்கம் மேலும் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் இறையச்சமுடையவர்களை நேசிக்கின்றான். இறைவனின் மகத்துவத்தை நினைவு கூர்ந்தவாறு அனைவரும் பயபக்தியுடன் இருங்கள். அதாவது அல்லாஹ்வின் மீதான அச்சத்தையும், பயத்தையும் உள்ளத்தில் உருவாக்குங்கள். அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். எவர் மீதும் அநீதியிழைக்காதீர்கள். அவசரம் காட்டாதீர்கள். மேலும் எவரையும் ஏளனமாக பார்க்காதீர்கள். கூறினார்கள்: ஜமாஅத்தில் ஒருவர் மோசமானவராக இருந்தால் பின்னர் அவர் அனைவரையும் அசுத்தமாக்கிவிடுகின்றார். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 9, பதிப்பு 1984)

அன்னார் (அலை) கூறினார்கள்: உள்ளத்தில் இறையச்சம் இருக்கும்போதுதான் உயர் மதிப்புகளும், உயர் நல்லொழுக்கங்களும் உருவாகின்றன. நமது ஜமாஅத்திற்கு குறிப்பாக தக்வாவிற்கான தேவை உள்ளது. அதிலும் குறிப்பாக, இறைவன் புறமிருந்து தோன்றியதாக வாதம் செய்துள்ள நபருடன் தாங்கள் தொடர்பு வைத்துள்ளதாகவும், அவரது ஜமாஅத்தின் பைஅத்தின் கீழ் இருப்பதாக அவர்கள் கருதுவதாலும் அவர்கள் தக்வாவை மேற்கொள்வது அவசியமாகும். அப்போதுதான் ஒருவர் எவ்வளவுதான் பகைமை, காழ்ப்புணர்ச்சி அல்லது தீமையில் மூழ்கியிருந்தாலும் சரியே அல்லது எவ்வளவு தான் அவர் உலகவாதியாக இருந்தாலும் சரியே அவர் அந்த அனைத்து ஆபத்துகளிலிருந்தும் இரட்சிப்பு பெறுவார். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 10, பதிப்பு 1984)

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் இந்த உலகின் அனைத்து துன்பங்களை காட்டிலும் தமது ஆன்மாவின் மீது கவலை கொள்ளுங்கள். உலகின் பெரும் துன்பங்கள் மனிதனுக்கு இருக்கின்றன. ஆனால், கூறினார்கள்: இல்லை: அந்த வேதனை, எல்லாவற்றையும் விட அதிகமாக உள்ளத்தில் இருக்க வேண்டும். அது என்ன வேதனை? தம்மிடம் தக்வா உள்ளதா? இல்லையா? (என்ற வேதனை அவரிடம் இருக்க வேண்டும்). (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 35, பதிப்பு 1984)

எனவே நாம் பைஅத்தின் உரிமையை வழங்க வேண்டும் என்றால், நாம் அல்லாஹ்வின் கருணைகளுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாக வேண்டும் என்றால், பின்னர் நாம் நமது நிலைமைகளைக் குறித்து எப்போதும் ஆய்வு செய்து கொண்டிருப்பது அவசியமாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நமது வாழ்க்கையை கழிப்பவர்களாகவும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாகவும் திகழ்வதற்கு அல்லாஹ் நம் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக. அல்லாஹ்வின் மீதான அச்சம் நம்மிடம் உருவாகிவிடட்டுமாக. நாம் உண்மையிலேயே கலிமாவிற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக திகழ்வோமாக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த இறுதியானவர்களின் ஜமாஅத்தைக் குறித்து நற்செய்தி வழங்கியுள்ளார்களோ அவரின் ஜமாஅத்தில் நாம் இணைந்து விடுவோமாக. அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக.

இன்றிலிருந்து 28 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் 14 அக்டோபர் அன்று இந்த பள்ளிவாசலும் திறக்கப்பட்டது என்று தற்போது வரும்போது அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள். தற்போது இந்த பள்ளிவாசலுக்கு 28 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்த 28 ஆண்டுகளில் தமது ஆன்மீகத்தில் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளோம் என்று இங்கு வசிக்கக் கூடியவர்களும், இந்த பகுதியில் வசிக்கக் கூடியவர்களும், பழைய அஹ்மதிகளும், புதிதாக வரக் கூடியவர்களும் ஒவ்வொருவரும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த அளவிற்கு பள்ளிவாசலுக்கான உரிமையை செலுத்த முயற்சி செய்தோம் என்றும் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் எதிர்காலத்திலும் பல நூற்றாண்டுகள் வரை இந்த பள்ளிவாசலுக்கு வரக் கூடியவர்களை வழங்கிக் கொண்டிருப்பானாக. மேலும், இந்த பள்ளிவாசல் எல்லாவகையான உலகியல் ஆபத்துகளிலிருந்தும் தப்பித்து இருக்கட்டுமாக. ஆனால், நாம் பள்ளிவாசல்களுக்குரிய உரிமையை வழங்கியவாறு அவற்றை நிரப்புவதற்கு நாம் முயற்சி செய்யும்போதுதான் இந்த உரிமை செலுத்தப்படும். அல்லாஹ் அதற்கும் நற்பேறை நமக்கு வழங்குவானாக.

தமிழாக்கம் :
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

செவிமடுத்துள்ளேன். அவர்கள் இதனை நினைவிற் கொள்ளட்டும். இது ஷய்த்தானிய எண்ணங்களாகும். அவர்களின் பாதங்கள் இங்கு தங்கிவிடக் கூடாது என்பதற்காக ஷய்த்தான் அவர்களின் உள்ளங்களில் அந்த எண்ணங்களை ஏற்படுத்தியுள்ளான்.

ஹுஸூர்! நான் இங்கு வந்து வீணாக அமர்ந்துள்ளேன். கட்டளையிட்டால் நான் பேராஃ சென்றுவிடுவேன். அங்கு குர்ஆன் வகுப்பு நடத்துவேன். இங்கு நான் ஹுஸூர் அவர்களுக்கு எந்த வகையிலும் பயன்படவில்லை என்பதாலும், மேலும், வீணாக அமர்ந்திருப்பதால் ஒரு பாவமாக அமைந்து விடக் கூடுமே என்றும் எனக்கு வெட்கம் வருகின்றது என்று ஒருநாள் ஹகீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் கூறினார்கள்.

நீங்கள் (இங்கு) அமர்ந்திருப்பதே ஜிஹாது ஆகும். இது வீண் வேலையொன்றும் அல்ல என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

சுருக்கமாக, மிகவும் வேதனை மிகுந்த சொற்களில் (காதியானிற்கு) வருகை தராதவர்களைப் பற்றி புகார் கூறினார்கள். மேலும் கூறினார்கள்: اِنَّ بُيُوْتَنَا عَوْرَةٌ

(எங்கள் வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன) என்று ஹஸரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் (பொருத்தமற்ற) காரணங்களை கூறியவர்களே இந்த காரணங்களை கூறுபவர்களாக இருக்கின்றனர். மேலும்

اِنْ يُّرِيْدُوْنَ اِلَّا فِرَارًا

(அவர்கள் தப்பியோடவே விரும்புகின்றார்கள். (33:14) என்று கூறி அல்லாஹ் அவர்களை பொய்ப்படுத்திவிட்டான்.

கூறினார்கள்: வாழ்க்கை மிகவும் நீண்டது என்று நமது நண்பர்களுக்கு யார் கூறினார்கள்? மரணம் எந்த நேரம் வந்திறங்கும்? என்று தெரியாது. எனவே கிடைக்கும் காலத்தை பெரும் பேறாக கருதுவதே உகந்ததாகும்.

இந்த நாட்கள் மீண்டும் கிடைக்காது. மேலும், (பின்னாட்களில்) இவை கதைகளாகவே இருக்கும் என்றும் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 410-காதியான் பதிப்பு 2018)

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

தேர்ந்தெடுத்துக் கொண்டேன். மேலும் நேரான வழியில் அதாவது இறைவன் வரை சென்றடையக் கூடிய வழியில் அவரை வழிநடத்தினேன் என்றும் அல்லாஹ் கூறினான்.

முஸ்தகீம் என்ற சொல்லானது அந்த வழி இறைவனை அடையக் கூடிய வழி என்பதை சுட்டிக் காட்டுகின்றது. ஏனெனில், இரண்டு புள்ளிகளுக்கு இடையில் இருப்பதே பாதையாகும். மார்க்க விவகாரத்தில் ஒரு புள்ளி என்பது மனிதன் ஆவான். மற்றொரு புள்ளி இறைவன் ஆவான். எனவே, இறைவன் வரை கொண்டு சேர்க்கும் பாதையே நேரான பாதையாகும். எந்தப் பாதை இறைவன் வரை கொண்டு சேர்க்காதோ அது முஸ்தகீம் என்று கூறப்படவும் முடியாது. ஏனெனில், அதன் திசை எந்த இலக்கை சென்றடையச் செய்ய வேண்டுமோ அதிலிருந்து விலகிவிட்டது.

இந்த வசனத்திற்கு முந்தைய வசனத்துடன் இந்த தொடர்பு உள்ளது. அதாவது, உங்களுக்கும் பரிசு கிடைக்கும். (ஆனால்) ஷரீஅத்தை நிராகரித்துவிட்டு, சுயமே உருவாக்கிக் கொண்ட சட்டத்தை தங்களுக்கு போதுமானதாகக் கருதிய மக்காவாசிகளைப் போன்று நீங்கள் ஆகிவிடக் கூடாது என்று முந்தைய வசனத்தில் கூறப்பட்டுவிட்டது. மேலும் இறைச் சட்டங்களில் கருத்து வேறுபாடு கொள்ளத் தொடங்கிய மற்றும் அதற்கு எதிராக செயல்படத் தொடங்கிய யூதர்களைப் போன்றும் நீங்கள் ஆகக் கூடாது என்றும் கூறப்பட்டிருந்தது.

நீங்கள் எப்படி ஆக வேண்டும்? என்று இறைவன் தற்போது கூறுகின்றான்.

கூறினான்: இப்ராஹீமைப் போன்று நீங்கள் ஆக வேண்டும். அவரிடம் உள்ள நற்குணங்களை நீங்கள் உங்களிடத்தில் உருவாக்க வேண்டும். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்றால், நாம் இப்ராஹீமிடம் எவ்வாறு நடந்து கொண்டோமோ அதேபோன்று உங்களுடனும் நடந்து கொள்வோம்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 269, காதியான் பதிப்பு 2010)

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

12ம் பக்கத் தொடர்ச்சி...

தத்துவத்தை எடுத்துக் கூறுங்கள். தொழுகையினால் என்னென்ன நன்மைகள் உள்ளன? தொழாமல் இருந்தால் என்னென்ன பாதிப்புகள்? என்பதையெல்லாம் அவர்களுக்கு கூறுங்கள். மேலும், நாம் அஹ்மதி முஸ்லிம் என்றழைக்கப்பட வேண்டும் என்றால், பின்னர் நாம் எவ்வாறு அமல் செய்ய வேண்டும்? என்பதையும் எடுத்துக் கூறுங்கள். நமது பேச்சுகளில் இரட்டை அமல்கள் இருக்கக் கூடாது. இல்லையென்றால் அது நயவஞ்சகமாகிவிடும். நாம் நல்ல பணிகளை செய்ய வேண்டும் என்றால், பின்னர் கவனத்துடன் செய்ய வேண்டும். அவ்வாறல்லாமல், நாங்கள் அஹ்மதி முஸ்லிம்கள் என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு பின்னர் நமது அமல்கள் அதற்கேற்ப இல்லையென்றால் அது சரியல்ல.

எனவே பெரியவர்களும் தொழுகைகளில் தமது முன்மாதிரிகளை வெளிப்படுத்த வேண்டும். தாய், தந்தை வீட்டில் தொழுது வருகின்றார்கள் என்றால், இறை வணக்கங்களில் அவர்களிடம் கவனம் இருக்கின்றது என்றால், பின்னர் பிள்ளைகளிடமும் கவனம் உருவாகிவிடும். எல்லா பக்கமும், எல்லாத் துறையும், எல்லா மட்டத்திலும் நாம் நமது தர்பிய்யத்தை வழங்க வேண்டும். அப்போதுதான் தர்பிய்யத்தில் சரியான விளைவு வெளிப்படும்.

ஒரு மணிநேரம் வரை நடந்த இந்த சந்திப்பின் நேரம் கண் மூடி கண் திறப்பதற்குள் முடிந்தது போன்று தோன்றியது. தமது அன்பிற்குரிய எஜமானரை மனம் குளிர இதயம் பார்த்திருக்கவில்லை. அதற்குள், நமது நேரம் முடிந்துவிட்டது என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள். இந்த எளியவள் ஹுஸூர் அவர்களிடம், ஜஸாக்குமுல்லாஹ் என்று கூறினேன். ஹுஸூர் அன்வர் அவர்கள் நமக்கு தமது விலைமதிப்பற்ற நேரத்தை ஒதுக்கினார்கள். மேலும், அனைத்து உறுப்பினர்களும் மகிழ்ச்சி மற்றும் துன்பம் நிறைந்த உள்ளத்துடனும், கண்ணீர் நிறைந்த கண்களுடனும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடமிருந்து விடைபெற்றோம்.

சந்திப்பிற்கு பிறகு அனைத்து உறுப்பினர்களும் ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். மேலும், இந்த வரலாற்று சிறப்பு மிக்க சந்தர்ப்பத்தில் லஜ்னாக்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவித்தேன். அல்லாஹ் அவர்களுக்கு சிறந்த நற்கூலியை வழங்குவானாக. இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சி ஃபின்லாந்து ஜமாஅத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் புகழ்வதில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். ஒவ்வொருவரின் உணர்வுகளையும் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

(சதர் லஜ்னா இமாயில்லாஹ், ஃபின்லாந்து)

(நன்றி: அல்ஃபஸ்ல் பத்திரிகை இன்டர்நேஷனல், 8 அக்டோபர், 2021)

* * * * *

தஃலீம் வகுப்புகளில் நூறு சதவிகிதம் வருகை அவசியமாகும்

பைஅத்துகளுக்கான இலக்கை நிர்ணயம் செய்யுங்கள். அப்போதுதான் சரியான வழிமுறையில் பணி செய்வது சாத்தியமாகும்

சம்பாதிக்கக்கூடிய பெண்களிடமிருந்து அதிக சந்தா பெறப்பட வேண்டும். வருமானம் இல்லாத பெண்களிடம் மென்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்

ஆடை எதுவாக இருக்கட்டும், எந்த வகையானதாகவும் இருக்கட்டும். ஆனால், அது வெட்கம் நிறைந்த ஆடையாக இருக்க வேண்டும். பெண்ணின் அழகு தென்படக் கூடாது

நாம் உலகை சீர்திருத்த வேண்டும். உலகை நமக்குப் பின்னால் கொண்டு வரவேண்டுமேயொழிய நாம் உலகத்திற்குப் பின்னால் செல்லக்கூடாது என்ற உணர்வை நமக்குள் நாம் ஏற்படுத்த வேண்டும்

தொழுகையின் முக்கியத்துவத்தின் உணர்வை ஊட்டுங்கள்

தாயும், தந்தையும் வீட்டில் தொழுகைகளை தொழுது வந்தால், இறை வணக்கங்களின் பக்கம் அவர்களுக்கு கவனம் இருந்தால் பின்னர் பிள்ளைகளிடத்திலும் கவனம் உருவாகிவிடும்

## ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் ஃபின்லாந்து லஜ்னா இமாயில்லாஹ் தேசிய செயற்குழு உறுப்பினர்களின் ஆன்லைன் சந்திப்பும், ஹுஸுர் அவர்களின் பொன்னான அறிவுரைகளும்

டிசம்பர் 18, 2021 ஆம் ஆண்டு, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை முதல் முறையாக சந்திப்பதற்கான நற்பேறு ஃபின்லாந்தின் லஜ்னா இமாயில்லாஹ்வின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கு கிடைத்தது. ஹுஸுர் அன்வர் அவர்கள் இந்த ஆன்லைன் சந்திப்பிற்காக டில்ஃபோர்ட், இஸ்லாமாபாதிலுள்ள MTA-ஸ்டுடியோவில் அமர்ந்திருந்தார்கள். அதேநேரம் ஃபின்லாந்து லஜ்னா தேசிய செயற்குழு உறுப்பினர்கள் Helsinki, ஃபின்லாந்தின் அஹ்மதிய்யா ஜமாஅத் மிஷன் ஹவுஸிலிருந்து கலந்து கொண்டார்கள். ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த சந்திப்பில் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு முன்னால் தத்தமது துறைகளின் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும், வழிகாட்டால் பெற்றுக் கொள்வதற்கும் ஃபின்லாந்தின் லஜ்னா இமாயில்லாஹ்வின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கு நற்பேறு கிடைத்தது. ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் ஃபின்லாந்து வாசிகளுக்கு நேரடியாக உரையாடும் நற்பேறும் ஃபின்லாந்து பூமிக்கு முதல் முறையாக கிடைத்தது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்தார்கள். பின்னர் சந்திப்பு ஆரம்பமானது. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எனது வலது பக்கத்திலிருந்து தொடங்கியவாறு ஒவ்வொருவராக அனைத்து செயற்குழு உறுப்பினர்களிடமும் அவர்களின் துறை தொடர்பாக கேட்டறிந்தார்கள். மேலும், விலை மதிப்பு மிக்க வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

அனைத்து மஜ்லிஸ்களின் மாதாந்திர அறிக்கைக்கும் பின்னூட்டம் வழங்கப்படுகிறதா? என்றும், பின்னர் சம்பந்தப்பட்ட தேசியத் துறைக்கு அறிக்கை வழங்கப்படுகிறதா? என்றும் ஹுஸுர் அன்வர் அவர்கள் பொதுச் செயலாளரிடம் கேட்டார்கள். அதற்கு, ஆம்! ஹுஸுர்! என்று பொதுச் செயலாளர் கூறினார்.

தஃலீம் வகுப்புகளில் நூறு சதவிகித வருகை இருக்க வேண்டும் என்று ஹுஸுர் அன்வர் அவர்கள் கல்விச் செயலரிடம் கூறினார்கள்.

ஹுஸுர் அன்வர் தப்லீக் செகரட்டரி சாஹிபாவிடம், நீங்கள் பைஅத்திற்கான இலக்கை நிர்ணம் செய்யுங்கள். அப்போதுதான் சரியான வழிமுறையில் பணி செய்வது சாத்தியமாகும் என்று கூறினார்கள்.

தர்பிய்யத் செகரட்டரி சாஹிபாவிடம் ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: எல்லா மட்டத்திலும் உள்ள செயற்குழுவை செயல்மிக்கதாக ஆக்கினால் பின்னர் மற்ற லஜ்னாக்களின் பலவீனங்களும் நீங்கிவிடும்.

91 சதவிகித லஜ்னாக்கள் தொடர்ந்து ஐவேளை தொழுகைக்கான ஏற்பாட்டை செய்து வருகின்றனர் என்ற விஷயத்தில் ஹுஸுர் அன்வர் அவர்கள் திருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

செகரட்டரி மால் சாஹிபாவிடம் ஹுஸுர் அன்வர் அவர்கள், சம்பாதிக்கக்கூடிய லஜ்னாக்களின் எண்ணிக்கையை கேட்டார்கள். மேலும், கூறினார்கள்: சம்பாதிக்கக்கூடிய பெண்களிடமிருந்து அதிக சந்தா பெறப்பட வேண்டும். வருமானம் இல்லாத பெண்களிடம் மென்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நாஸிராத் செகரட்டரி சாஹிபாவிற்கு இந்த வழிகாட்டலை வழங்கினார்கள். அதாவது, நாஸிராத் சிறுமிகளுக்கு உருது (மொழி) தெரியாது என்றால், அவர்களுக்கு ஆங்கிலத்தில் புத்தகங்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். எவர்கள் ஆங்கிலத்தில் சிறந்து விளங்குகின்றார்களோ அவர்களைக் கொண்டு புத்தகங்களை மொழியாக்கம் செய்யுங்கள்.

ஹுஸுர் அன்வர் அவர்கள், ஸியாஃபத் செகரட்டரி சாஹிபாவிடம் அன்றைய நாள் உணவின் menu-வைக் குறித்து கேட்டார்கள். குருமா மற்றும் ஷாஹி டுக்டே எனும் ஒரு வகை உணவு தயாரித்துள்ளதாக ஸியாஃபத் செகரட்டரி கூறினார்கள். ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அவரை ஊக்கப்படுத்தியவாறு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் செகரட்டரி உமூரே தலபாவிடம், பல்கலைக்கழகங்களுக்கு செல்லக்கூடிய மாணவிகளின் எண்ணிக்கையையும், Phd செய்யக்கூடிய லஜ்னாக்களின் எண்ணிக்கையையும் கேட்டார்கள். அப்போது, 18 மாணவிகள் உயர் கல்வி பயின்று வருவதாகவும், 3 பேர் Phd செய்து கொண்டிருப்பதாகவும் செகரட்டரி சாஹிபா கூறினார்கள். ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், அதில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர், ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சிலவற்றை கூறுவதற்கு எனக்கு நேரம் வழங்கினார்கள். அப்போது நான், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் கேள்விகள் கேட்பதற்கு அனுமதி பெற்றுக் கொண்டேன். மேலும், செயற்குழு உறுப்பினர்களின் கேள்விகளுக்கு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பதிலளித்தார்கள். ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்த உதவியாளர்களான நாஸிராத் சிறுமிகளையும் ஊக்கப்படுத்தினார்கள்.

ஒரு லஜ்னா உறுப்பினர் கேள்வி கேட்டார்: ஹுஸுர்! லஜ்னாவும் மற்ற கிளை அமைப்புகளுடன் சேர்ந்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தால் பின்னர் தூதுச் செய்தி மிக விரைவாக அனைவரிடமும் சென்று சேர்ந்து விடும் என்று சமீபத்தில் ஒரு சந்திப்பின்போது தாங்கள் கூறியிருந்தீர்கள். எனது கேள்வி என்னவென்றால், ஆண்கள் பிரசுரங்கள் விநியோகம் செய்வதற்கு வெளியில் செல்லும்போது அதில் லஜ்னா எப்படி சேர்ந்து கொள்ள முடியும்?

அப்போது ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: அவ்வாறு செய்வதிலிருந்து லஜ்னாவை எந்த விஷயம் தடுக்கின்றது? நீங்கள் கடை வீதிக்கு செல்கின்றீர்கள். பொருட்கள் வாங்கி வருகின்றீர்கள். மளிகை சாமான்கள் வாங்குகின்றீர்கள். நாள் முழுவதும் சுற்றுகின்றீர்கள். நடை பயணம் செல்கின்றீர்கள். நாஸிராத் சிறுமிகளை அழைத்துக் கொண்டு பூங்காங்களுக்கு செல்கின்றீர்கள். பள்ளிக்கூடத்திற்கும் செல்கின்றீர்கள். எனவே, இரண்டு இரண்டு, மூன்று மூன்று குழுக்களை உருவாக்கிக் கொண்டு செல்லுங்கள். பிரசுரங்கள் விநியோம் செய்யுங்கள் அல்லது

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 24 November 2022 Issue No. 47

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அறிமுகத்தை உருவாக்குங்கள். அதிக அதிகமாக பெண்களுடன் சேர்ந்து பெண்களுக்கு தப்லீக் செய்யுங்கள். அதில் என்ன தவறு உள்ளது?

முந்தைய காலத்தில் பெண்கள் போர்களில் பங்குபெற முடியும் என்றால், தற்போது துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்ய முடியாதா என்ன? பெண்கள் போரில் பங்கெடுத்தார்கள் என்று நான் நேற்று தான் (குத்பாவில்) கூறியிருந்தேன். இந்தக் காலத்து போர் என்பது தப்லீக் செய்வதே ஆகும். மேலும், கூறினார்கள்:

அந்நேரத்தில் நீங்கள் பிரசுரங்களை மட்டுமே விநியோம் செய்யுங்கள். அதிகபட்சமாக தனித்தனியாக செல்லாதீர்கள். இரண்டு, மூன்று குழுக்களை உருவாக்கிக் கொண்டு செல்லுங்கள். ஒன்றிரண்டு நாஸிராத் சிறுமிகளையும் அந்தக் குழுக்களில் வைத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் அவர்களுக்கும் பயிற்சி கிடைத்துவிடும். பின்னர் அதுமட்டுமின்றி, பெண்களுடன் தொடர்புகளை உருவாக்குங்கள். பெண்களுக்கு மத்தியில் அதிகமாக தப்லீக் செய்யுங்கள்.

இளம் பெண்கள், குறிப்பாக சிறு வயது பெண் பிள்ளைகள் பெரும்பாலும் தமது ஆடைகள் விவகாரத்தில் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகிவிடுகின்றனர். எனவே பிள்ளைகளிடத்தில் பர்தா மற்றும் நமது கலாச்சார ஆடைகளின் மீது அன்பையும், நம்பிக்கையையும் எவ்வாறு உருவாக்குவது? என்றும், ஹுஸூர்! தாங்கள்(எங்களுக்கு) அறிவுரை வழங்குங்கள் என்றும் மற்றொரு லஜ்னா உறுப்பினர் கேள்வி கேட்டார்.

ஹுஸூர் கூறினார்கள்: விஷயம் என்னவென்றால், மார்க்கத்திற்கு முன்னுரிமை உள்ளது. ஆடை எதுவாக இருக்கட்டும், எந்த வகையாகவும் இருக்கட்டும். ஆனால், அது அடக்கமான ஆடையாக இருக்க வேண்டும். நீங்கள் ஷல்வார், கம்மீஸே அணிய வேண்டும் என்றோ அல்லது நீண்ட ஆடைகளை அணிய வேண்டும் என்றோ திருக்குர்ஆன் கூறவில்லை. உங்களது ஆடை அடக்கமான ஆடையாக இருக்க வேண்டும். பெண்களின் அழகு தென்படக்கூடாது என்றே திருக்குர்ஆன் கூறுகின்றது. இது பெண்களின் தர்பிய்யத் துறையின் பணியாகும். நாஸிராத் துறையின் பணியும் ஆகும். குழந்தைப் பருவம் முதலே இந்த எண்ணத்தை உருவாக்குவது தாய், தந்தையின் பணியுமாகும். தர்பிய்யத் துறை தாய், தந்தையின் மூலம் தர்பிய்யத் வழங்க வேண்டும். நாஸிராத் துறை தனது அமைப்பின் அடிப்டையில் தர்பிய்யத் வழங்க வேண்டும். நாம் அஹ்மதி முஸ்லிம்கள் ஆவோம். எனவே அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள கட்டளைகளின் படி நாம் அமல் செய்ய வேண்டும். அடக்கமான ஆடையை அணிய வேண்டும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இவ்வாறு தாய், தந்தை தமது வட்டத்தில் பெண் பிள்ளளைகளுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும்.

சில அஹ்மதி அல்லாத அரபுப் பெண்களை நான் பார்த்துள்ளேன். அவர்கள் ஜீன்ஸ் மற்றும் பிளவுஸ் அணிந்து கொண்டு மேலே ஹிஜாப் அணிந்து கொள்கின்றனர். மேலும், நாம் மிகவும் நல்ல முறையில் பர்தா செய்துள்ளோம் என்று அவர்கள் கருதுகின்றனர். அந்த ஆடையில் நிர்வாணம் வெளிப்படுப்படும்போது அந்த பர்தாவினால் எந்தப் பயனும் இல்லை. ஆடையிலிருந்தே முழு அழகும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். எனவே வெளியில் செல்லும்போது நீண்ட ஆடைகளை அணிந்துவிட்டு, வீட்டிலும், தமது உறவினர்களுக்கு முன்னிலையிலும் சரியில்லாத ஆடையை அணிவது தவறாகும்.

வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று ஹதீஸில் வந்துள்ளது.

எனவே, வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும். மேலும் நாம் அஹ்மதி முஸ்லிம்கள் ஆவோம் என்ற எண்ணத்தை குழந்தைப் பருவம் முதலே பெண் பிள்ளைகளின் மூளையில் ஏற்படுத்தி விட வேண்டும். நாம் நமது முன்மாதிரிகளையும் காட்ட வேண்டும். நம்மிடம் இரட்டை அமல்கள் இருக்கக் கூடாது. நமது ஆடை அடக்கமான ஆடையாக இருந்தால், நம்மிடம் வெட்கமும் நிலைபெற்றிருக்கும். பின்னர், பெரியவர்களாக ஆன பிறகும் அந்த அடக்கமான ஆடைக்கு ஏற்ப அவர்கள் தமது ஆடைகளை ஆக்கிக் கொள்வார்கள். பின்னர் பர்தாவும் அணிவார்கள். மேலும், ஹிஜாப் அணிவதற்கும் அவர்கள் வெட்கப்பட மாட்டார்கள். தாழ்வு மனப்பான்மையும் இருக்காது.

நாம் உலகை சீர்திருத்த வேண்டும். உலகை நமக்குப் பின்னால் கொண்டு வரவேண்டுமேயொழிய நாம் உலகத்திற்குப் பின்னால் செல்லக்கூடாது என்ற உணர்வை நமக்குள் நாம் ஏற்படுத்த வேண்டும். இந்த உணர்வு ஏற்பட்டுவிட்டால் நம்பிக்கை பிறந்துவிடும். தாய்மார்களே நம்பிக்கையற்றவர்களாக இருந்தால், வீட்டைவிட்டு வெளியில் செல்லும்போது ஆங்கிலத்தில் இரண்டு வார்த்தைகள் பேசிவிடுகின்ற அல்லது உள்ளூர் மொழியில் பேசுகின்ற மேற்கத்திய மக்களைப் பார்த்து அஞ்சி மௌனமாகிவிட்டால் அது சரியல்ல.

நாம் இஸ்லாத்தின் பிரச்சாரம் மற்றும் போதனையை மக்கள் வரை எட்ட வைக்க வேண்டும். மேலும் அதற்காக நாம் நமது முன்மாதிரிகளை நிலைநாட்ட வேண்டும். நாம் நம்மை இஸ்லாத்தின் சரியான போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்ள வேண்டும். இது நன்றி செலுத்துவதற்கான ஒரு வழிமுறையாகும்.

நீங்கள் அனைவரும் இந்த நம்பிக்கையை உருவாக்கும்போதும், தர்பிய்யத் துறையும், நாஸிராத் துறையும், தாய், தந்தையரும் இணைந்து பணி செய்யும்போதும் எந்த தாழ்வு மனப்பான்மையும் உருவாகாது.

பின்னர் ஒரு லஜ்னா உறுப்பினர் இவ்வாறு கேள்வி கேட்டார். அதாவது, ஒரு வருடகாலமாக லஜ்னாக்களுக்கு தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவது தொடர்பாக கவனமூட்டப்பட்டு வருகிறது. ஆனாலும் சோம்பல் நீங்கவில்லை. அதுபோன்ற லஜ்னாக்களுக்காக எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும்? என்று கேட்டார்.

ஹுஸூர் கூறினார்கள்: நிரந்தரமாக கவனமூட்டிக் கொண்டிருப்பது உங்களின் பணியாகும். அதுவே வேலையாகும். அறிவுரை செய்து கொண்டு இருங்கள். தொடர்ந்து செய்து கொண்டு இருங்கள். தொடர்ந்து செய்து கொண்டு இருங்கள் என்பதே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டளையாகும். அந்த அறிவுரையை நாம் செய்து கொண்டே செல்ல வேண்டும். எந்த அளவுக்கென்றால் அது பழக்கமாகிவிட வேண்டும். தொழுகையின் முக்கியத்துவத்திற்கான உணர்வை ஊட்டுங்கள். நாம் ஏன் தொழுகின்றோம்? ஏன் தொழ வேண்டும்? என்று தொழுகையின்

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad